5. நிதி அமைச்சர் அவைக்கு வராமை குறித்து விளக்கம்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைமீது நடக்கும் விவாதம், நமது ஜனநாயக மரபுப்படி பட்ஜெட் கூட்டத்திற்கு முன்னால் தொடங்குகிற ஒன்றாகும். இந்த விவாதத்தில் இரண்டு சபைகளிலுமுள்ள உறுப்பினர்கள் என்னென்ன கருத்துக்களைச் சொல்கிறார்களென்று அறிந்து, அந்தக் கருத்துக்களையும் சிந்தித்து, பட்ஜெட் தயார் செய்து, அதற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, ஆளுநர் உரை மிக முக்கியமான ஒன்றாகும். இங்கே மூன்று நாட்களாக இந்த விவாதம் நடந்து வருகிறது. ஆனால், நமது மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கே வரவேயில்லை. அப்படியானால் இங்கே நடக்கும் விவாதங்களை அவர்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதவில்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. தலைவரவர்கள் இது குறித்து அவருடன் தொடர்புகொண்டு, நிதியமைச்சர் அவர்கள் வர ஏற்பாடு செய்தால், நாங்கள் பேசுவதெல்லாம் பயனுடையதாக, நிதிநிலை அறிக்கையை வரையறை செய்ய வாய்ப்பு அளிக்குமென்று தலைவரவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மேலவையில் இதுவரை நடைபெற்ற கூட்டங்களில் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கலந்துகொள்ளவில்லை என்று குறைபட்டிருக்கிறார்கள். குறைபாடு என்றுதான் கருதுகிறேன்; அவர் அதை குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. மேலவையினுடைய முக்கியத்துவம், சிறப்பு எல்லாவற்றையும் நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். குறிப்பாக, ஆளுங் கட்சியைச் சேர்ந்த நாங்கள் இந்த அவைக்குள்ள சிறப்பை பெரிதும் உணர்ந்திருக்கிறோம். நிதியமைச்சரவர்களுக்கு மிகப் பெரிய வேலைகள் இருக்கின்றன. கடந்த 2, 3 நாட்களாக அவர் உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறார்களென்பதையும் இந்த அவையின் முன்னால் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவதாக, ஆளுநர் அவர்களின் உரையின் மீது நடக்கும் விவாதம் என்பது—It is a criticism on broad lines of the Governor's Address. நாங்கள் குறிப்பெடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை நாங்கள்

1977 ஜுலை 11] [திரு. கே. இராஜா முகமது]

குறிப்பாக எழுதி, அவ்வப்போது எங்களுடைய முதலமைச்சரவர்களுக்கும், நிதியமைச்சரவர்களுக்கும் அனுப்பி வைக்கிறோம். அது குறித்து அந்தந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களிடம் யோசனைகள் தரும்படியும், 'சஜ்ஜஸ்டிவ்'-ஆகச் சொல்லி இருக்கின்ற கருத்துக்கள் பற்றி விவாதித்து வருகிறோமென்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னிலை விளக்கமாக ஒன்றினைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் கைத்தறித் துறையைப் பற்றிச் சொன்னார்கள். சிறிது உணர்ச்சிவசப்பட்டு, மனிதாபிமான உணர்வுகளோடு பேசினார்கள். அதைப்பற்றிச் சொன்னோம். அப்போதுகூட முதலமைச்சரவர்களும், நிதியமைச்சரவர்களும், அவர்கள் யோசனையாகச் சொன்னார்களா என்று கேட்டார்கள். அவர்கள் சொன்னது அனைத்தும் யோசனைகள்தான்; மனிதாபிமான உணர்வோடு அவர்கள் சொல்லிய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சொல்லுகின்ற கருத்துக்கள்குறித்து நாங்கள் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறோமென்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருக்கிற மிகக் குறுகிய காலத்தில், மிகப் பெரிய, புரட்சிகரமான நிதிநிலை அறிக்கையை வைக்க வேண்டிய மகத்தான பொறுப்பு நிதியமைச்சரவர்களுக்கு இருக்கிறது. அதற்கான பல்வேறு அலுவல்களில் அவர்கள் ஈடுபட்டுள்ள காரணத்தால் அவர்கள் வரவில்லை. அமைச்சரவைக்கு ஒரு கூட்டுப்பொறுப்பு இருக்கிறது. அதைக் கவனத்தில்கொண்டு, உறுப்பினர்களுடைய கருத்துக்கள் பரிசீலனை செய்யப்படுமென்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: துணைத் தலைவரவர்களே, அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு என்பதை ஒத்துக்கொள்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் வந்து, நாங்கள் சொல்கிற கருத்துக்களைக் கேட்டு, அவர்களுடைய கற்பனை வளத்திலே இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, தக்க தருணத்திலே பயன்படுத்திக்கொள்ள முடியும். இன்னொருவர் குறிப்பெடுத்துச் சொல்கிறபோது, நாங்கள் சொல்கிற அந்தக் கருத்தினுடைய ஆழம் குறை கண்டுவிடும் என்று நினைக்கிறோம். காலையில் பேரவைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால், மாலையில் இங்கு வரவில்லை. உடல்நலம் சரியில்லை என்றால் ஒன்றும் சொல்வதற்கில்லை.

[திரு. எம். சங்கரலிங்கம்] [1977 ஜூலை 11

காலையிலே பேரவைக்கு வந்து, மாலையிலே இங்கு வரவில்லை யென்றால், இந்த அவையின் மதிப்பு குறைக்கப்படுகிறதோ என்ற ஐயப்பாடு தோன்ற வாய்ப்பு ஏற்படுகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மேலவையில் அத்தனை அமைச்சர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதும் சரி அல்ல. இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில், இங்கு சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அறியப்பட்டு அதற்கேற்ற பரிகாரங்களைக் காணக்கூடிய அளவில் அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு நிதி அமைச்சரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை இருந்தால் நிச்சயமாக அது நிறைவேற்றப் படும்.

(அப்போது நிதி அமைச்சர் அவையில் நுழைந்தார்.)

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. கு. மா. பால சுப்பிரமணியம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தமது திருத்தங்களை முன்மொழிவார்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கீழ்க்கண்ட திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

"பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெற்ற ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகள் இளைஞர் அணியினர் இன்று வேலையிழந்து போராட்டத்தில் ஈடுபடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைப் பற்றியோ, மீண்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியோ குறிப்பிடாதது வருத்தத்திற்குரியது.